திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் பணிபுரிகிற சிப்பந்திகள் பல ஆண்டுகளாக ஒரே இடத்தில் இருப்பதனால் அவர்களை மாற்று வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றி எல்லாம் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரை வந்த பிறகுதான் எவ்வித முடிவை எடுக்கலாம் என்பது பரிசீலிக்கப்படும். தற்போது யார் நியமனம் செய்கிற அதிகாரியோ அவருக்குத்தான் மாற்ற, வைக்க உரிமை உண்டு. ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் சிப்பந்திகளை நியமிக்கும் அதிகாரத்தை இப்போது அவர்களேதான் வைத்துக்கொண்டிருக் கிறார்கள். ஆகவே மாற்றுகிற அதிகாரத்தை மாவட்ட ஆட்சி யாளர் எடுத்துக்கொள்ள முடியாது. இதில் இருக்கிற சங்கடங்கள் எல்லாம் குழுவின் பரிந்துரை வந்த பிறகு பரிசீலிக்கப்படும்.

* 60 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to change the designation of Personal Assistants to Collectors in charge of Panchayat Development in the Districts;

(b) if so, the proposed designation; and

(c) the reasons therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மாவட்ட ஆட்சியரின் ஊராட்சி வளர்ச்சிக்கான நேர் உதவி அலுவலர்களின் பதவிப் பெயரை மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்று மாற்றி ஆணை பிறப்பிக்கப் பட்டது.

(உ) ஊராட்சி வளர்ச்சிக்கான நேர் உதவி அலுவலர்கள் தங்களது பதவிப் பெயருக்கேற்ப ஊராட்சி வளர்ச்சியில் அன்றாடம் வேலைகளைக் கவனிக்க மாவட்ட ஆட்சியாருக்கு உதவுகிறார்கள். இப்பணிகளோடு அவர்கள் வட்டாரங்களின் ஆய்வு அலுவலர்களாகவும் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் செயலாளராகவும் பணிபுரிகின்றனர். இந்தக் கூடுதலான பொறுப்பு களினால் மாவட்ட ஆட்சியரின் ஊராட்சி வளர்ச்சிக்கான நேர் உதவி அலுவலர்களின் பதவிப் பெயரை மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் என மாற்றுவது தகும் என கருதப்பட்டது.

Dr. H. V. HANDE : These District Development Officers give their decision. May I know whether their orders have again to be passed by the District Revenue Officer and then again by the Collector? May I know whether Government propose to revise the number of tiers so that there will be quicker uow of orders from bottom to top level and vice-versa?

1971 ஜூன் 26]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது பெயர்மாற்றம்தான் செய்யப்பட்டிருக்கிறதே தவிர அதிகார மாற்றம் செய்யப்படவில்லை. நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை வந்தபிறகு இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆறுமுகம்: மாவட்ட நேர் உதவியாளர்களின் பெயரை மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்று மாற்றியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த க்ரேடில் மாவட்டத்தில் பல மாவட்ட அதிகாரிகள் இருப்பதனால் மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்ற பெயரில் ஒரு மரியாதை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, முன்பு இருந்ததைப்போலவே மாவட்ட ஆட்சியரின் நேர் உதவியாளர் என்ற பெயரையே வைக்க பரிசிலிக்க முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாவட்ட ஆட்சியரின் நேர் உதவி அலுவலர் என்றால் அவருக்கே உதவி செய்யக்கூடியவரைப்போல இருக்கிறது, இவர்களிடம் இப்போது தனிப் பொறுப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அவர்களுடைய கோரிக்கையின் பேரிலேயே இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்று பெயரை மாற்றியிருப்பது போல, கோட்ட அளவில் டி. டி. ஓ. என்று பெயர் மாற்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போது அப்படிப் பட்ட செயற்குறிப்பு இல்லை.

அமராவதி நீர்த்தேக்கத் திட்டப்பகுதியில் கிணறுகளும் விசை ஏற்றங்களும்

* 61 வின.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று கோவை மாவட்டத்தில் அமராவதி நீர்த் தேக்கத் திட்டப் பகுதியில் 2,000 கிணறுகளும், 2,000 விசையேற்றங்களும் அமைக்கும் வேலை எப்பொழுது துவக்கப்படும்?

(இ) மேற்படி வேலை எந்தத் தேதியில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) வினாவில் குறிப்பிட்ட ஒன்று ஏற்கனவே 30-9-1969 இல் தொடங்கப்பட்டுவிட்டது.

(இ) இந்தத் திட்டம் 30-6-73 இல் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.